பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 28 வெள்ளிக்கிழமை 12.03.2021 கதிர் 358

## 3 விபத்துக்களில் மூவர் உயிரிழப்பு

நேற்றைய தினம் ஏற்பட்ட விபத்துக்களில் பாடசாலை மாணவன் ஒருவன் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

ஹொரவ்பொத்தானை – கபுகொல்லாவ பிரதான வீதியில் பஸ்ஸூடன் மோட்டார் சைக் கிள் மோதி விபத்துக்குள்ளானதில் 16 வயது டைய மாணவன் ஒருவன் 2

# தென்னாபிரிக்காவில் பரவும் திரிபுபட்ட வைரஸ் இங்கும்!

## தன்சானியாவிலிருந்து வந்தவரில் இன்று அடையாளம் காணப்பட்டது



**கொழும்பு,மார்ச் 12**

**திரிபுபட்ட நிலையில் தென்னாபிரிக்காவில் இனங்காணப் பட்ட புதியவகை கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள் ளான ஒருவர், இலங்கையில் அடையாளம் காணப்பட் டுள்ளார் என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வு நிறுவகத்தின் பணிப்பாளர் சந்திம ஜீவசுந்தர தெரிவித்துள்ளார்.** 2

## கல்லடி கடற்படை முகாமிற்குள் பரவியது கொரோனாத் தொற்று

### 41 படையினர் இதுவரைப் பாதிப்பு



மட்டக்களப்பில் 41 கடற்படையினருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள் ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர். கல்லடி கடற்படை முகாமில் முதலில் ஏமு பேரிடம் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோத னையில் மூவருக்கும் செவ்வாய்க்கிழமை 58 வீரர்களிடம் மேற்கொண்ட 2

## முழு முயற்சியில் மீண்டும் ரணில்!



நாடாளுமன்றத் தேர்தலில் தமது கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வியை அடுத்து சில காலம் அமைதி பேணிய ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க இப்போது பாரியதொரு அரசியல் கூட்டணியைக் கட்டி யெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதற்காக முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர வின் உதவியையும் அவர் கோரியுள்ளார். இதனை ஏற்று மங்களவும் இம்முயற்சியில் களமிறங் 2

## சுகாதாரத் தொண்டர்கள் தொடர்ந்து 5 ஆம் நாளாக உணவு தவிர்ப்பு போர்





வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் 5 ஆவது நாளாக இன்றும் தொடர்கின்றது.

கடந்த முதலாம் திகதியில் இருந்து போராட்டத்தில் ஈடுபட்டுவந்த வடக்கு மாகாண சுகாதார 2

## ஜனாதிபதியை இன்று சந்தித்து பேச்சு நடத்தினார் பிள்ளையான்



நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன்(பிள்ளையான்) இன்று ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

இதன் போது விசேடமாக மட்டக்களப்பு மாவட் டத்தின் அபிவிருத்தி மற்றும் எதிர்கால அரசி யல் திட்டங்கள்,எதிர்கால மாகாண 2

## யாழில் இந்தியத் தூதுவர்





இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்திற்கான இந்த விஜ யத்தின் போது இந்தியத் தூதுவர் பல இடங்களிற்கும் சென்று பலரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். 2

## இளைஞன் மீது கொடூரத் தாக்கு!

### பரு. சுப்பர்மடத்தில்



யாழ். பருத்தித்துறை – சுப்பர்மடம் பகுதி யில் கடற்கரை கொட்டிலில் படுத்துறங்கிய இளைஞனை இரும்பு கம்பிகளால் கொடூர மாகத் தாக்கிய குழு ஒன்று காயப்பட்டவரைப் பின்னர் காலில் பிடித்து வீதியால் தரதர வென்று இழுத்து சென்ற கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது. 2

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்.
A/L 2023
தொழிநுட்பபிரிவு ஆரம்பம்
14.03.2021 ஞாயிறு காலை 09 மணி
➡ பொறியியல் தொழினுட்பம்
➡ தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
➡ உயிர்முறைமைகள் தொழினுட்பம்

## விமல் வீரவன்ஸவுக்கு எதிராக 43 எம்.பிக்கள் போர்க்கொடி!

### பிரதமரிடம் ஆதாரத்துடன் முறைப்பாடு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த 43 எம்.பிக்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக முறைப்பாடு செய் துள்ளனர் என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் புதன்கிழமை 2

## சொந்தக் கட்டடத்தில் கொமர்ஷல் வங்கி

COMMERCIAL BANK

கொமர்ஷல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை ஏப்ரல் திங்கட்கிழமை 15 ஆம் திகதி முதல் சொந்தகட்டடத்தில் தனது சேவையை தொடரவுள்ளது.

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கொமர்ல் வங் கியின் யாழ்ப்பாணக் கிளை திங்கள் முதல் தனது சொந்த 'பசுமைக் கட்டடத்தில்' (தற் போதுள்ள வங்கிக்கு அருகில்) தனது சேவையை 2

## யாழில் இந்தியத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்குச் சென்று விசேட பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார். இதன் பின்னர் நல்லை ஆதீனத்திற்கு சென்று ஆதீன குருமுதல்வரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்திய உதவியில் அமைக்கப்படும் யாழ்ப்பாண கலாச்சார மத்திய நிலையத்திற்கும் சென்று புனரமைப்பு பணிகளைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து யாழ் பொது நூலகத்திற்கு சென்று நூலகத்தைப் பார்வையிட்டமையுடன் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்நிகழ்வில் யாழ் மாநகர முதல்வர், யாழ் இந்திய துணைதூதர் பாலச்சந்திரன், மாநகரசபை உறுப்பினர்கள், அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இன்று வெள்ளி மதியம் வடக்கு ஊடகங்களின் பிரதானிகளைச் சந்தித்த தூதுவர் அரசியல் கட்சிகளின் பிரமுகர்களையும் சந்தித்து வருகிறார். நாளை வரை அவர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பார்.

## முழு முயற்சியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கியுள்ளார்.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் ரணில் விக்கிரமசிங்கவை தனது மகன் சகிதம் கடந்த வாரம் சந்தித்து சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்படி ரணிலின் அதிரடி அரசியல் ஆட்டம் மீண்டும் விரைவில் ஆரம்பமாகும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

## கல்லடி கடற்படை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பி.சி.ஆர். பரிசோதனையில் 39 வீரர்களுக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக சுகாதார தரப்பினர் மேலும் தெரிவித்தனர்.

இதன் காரணமாக மாவட்டத்தில் பொலிஸார், வங்கி உத்தியோகத்தர்கள் உட்பட பல தரப்பினரிடமும் தொடர்ந்தும் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம் பெற்றுவருகின்றன.

## தென்னாபிரிக்காவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தன்சானியாவில் இருந்து வருகை தந்த இலங்கையர் ஒருவருக்கே இவ்வாறு புதிய வகை கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றின் சி484லு என்கிற புதிய வகையான தொற்றுக்கு இலக்கான இலங்கையர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் மஹியங்கனை பிரதேசத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வகையிலான வைரஸ் தற்சமயம் தென்னாபிரிக்க நாட்டில் பரவி வருகின்றதாகவும் கூறப்படுகின்றது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை 520பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸ் பரவல் அச்சநிலைமை குறித்து அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் புரிதல் இன்றி செயற்படுகின்றனர் எனப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றை கண்டறிவதற்கு முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர்.பரிசோதனை குறைக்கப்படுவதன் காரணமாக கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவலடையும் சாத்தியம் அதிகம் காணப்படுவதாகவும் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## 3 விபத்துக்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளான் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கம்பஹா – கிரிந்திவெல வீதியின் திக்கந்த சந்தியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து டிப்பர் ஒன்றுடன் மோதியதில் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை நேற்று இரவு ஆனமடுவ – நவகத்தேகம வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று பாதசாரி ஒருவர் மீது மோதிய விபத்தில் 37 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

## சுகாதாரத் தொண்டர்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொண்டர்கள் தமக்கான தீர்வு வழங்கப்படாத நிலையில் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் தமது போராட்ட வடிவத்தை உணவு தவிர்ப்புப் போராட்டமாக மாற்றி முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டம் இடம்பெறுகின்ற இடத்திற்கு ஒரு சில தமிழ் அரசியல் பிரதிநிதிகள் வருகைதந்திருந்த போதிலும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் இதுவரை வருகை தரவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சொந்தக் கட்டடத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதுப்பொலிவுடன் தொடரவுள்ளது.

இந்நிகழ்வில்கொமர்ஷல்வங்கியின் தலைவரும் முன்னாள் பிரதம நீதியரசருமாகிய க.ஸ்ரீபவனும்கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமானசி.றெங்கநாதனும்பசுமைக் கட்டடத்தினை திறந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வாடிக்கையாளர்களது வங்கித் தேவைகளை இலகுமுறையில் நிறைவேற்றுவதற்கு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய பண வைப்பு மற்றும் மீளப்பெறல் இயந்திரங்கள் போதுமான அளவிலும் (மீள்சுழற்சி இயந்திரம் – CRM),காசோலை வைப்பு இயந்திரம் மற்றும் மேலதிகமான பாதுகாப்பு பெட்டக வசதியுடன் (Safe Locker) தனது சேவையினை யாழ்ப்பாணக் கிளை விஸ்தரிக்கவுள்ளது.

## இளைஞன் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவத்தில்படுகாயமடைந்தஇளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். சந்தேகநபர்கள் தப்பி ஓடி தலைமறைவாகியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:-

பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் இன்று பிற்பகல் அதே பகுதியை சேர்ந்த 22 வயதுடைய ஜெகதீசன் றீகன் என்ற இளைஞன் கடற்கரை கொட்டிலில் படுத்துறங்கிக் கொண்டிருந்தார். அச்சமயம் அங்குவந்த 3 பேர் கொண்ட கும்பல் இரும்பு கம்பிகளால் மூர்க்கத்தனமாக அந்த இளைஞனைத் தாக்கியதுடன் மயங்கி கிடந்த இளைஞனின் காலை பிடித்து வீதியால் தரதரவென்று இழுத்தும் சென்றுள்ளது.

முன் பகையின் காரணமாகவே இந்தக் கொடூரத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதலுக்கு இலக்கான இளைஞனின் கை மற்றும் கால்கள் முறிந்த நிலையிலேயே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டான் என அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பருத்தித்துறைப்பொலிஸார்விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஜனாதிபதியை இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சபை தேர்தல் போன்ற பல முக்கியமான விடயங்கள் விரிவாக கலந்துரையாடப்பட்டது எனக் கூறப்பட்டது.

ஜனாதிபதிவிரைவில்மட்டக்களப்புக்கு வருகை தரவுள்ளார் என இந்தச் சந்திப்பின் போது தெரிவிக்கப்பட்டது. இனி வரும் காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்திற்குக் கூடுதலான நிதி உதவிகள் வழங்க ஜனாதிபதி உறுதிமொழி அளித்தார் எனவும் கூறப்பட்டது.

## விமல் வீரவன்சவுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதமரை சந்தித்த 43 எம்.பிக்களும் வீரவன்ஸ கட்சி ஒற்றுமையை சீரழிக்க முயல்கிறார் எனக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இஸ்லாமிய தீவிரவாத சிந்தனை கொண்டோரை மகிழ்விக்கும் நோக்கில் அரசில் உள்ள ஒரு பகுதியினர் செயற்படுகின்றனர் என அண்மையில் விமல் வீரவன்ஸ வெளியிட்ட கருத்துக் குறித்த விமர்சனங்களின் பின்னணியில் இவ்வாறான முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விமல் வீரவன்ஸவின் சம்பந்தப்பட்ட பேச்சின் ஒளிப்பதிவுகளையும் பிரதமரிடம் கையளித்துள்ள எம்.பிக்கள் இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

## சிலாபம் முன்னேஸ்வரத்தில் பக்திபூர்வமாக சிவராத்திரி





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாகிய சிலாபம் முன்னேஸ்வரம் ஆலயத்தில் மகா சிவராத்திரி உற்சவம் நேற்று முன்தினம் இரவு முதல் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

லிங்கோற்பவருக்கு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று விசேட அபிஷேக ஆராதனைகளுடன் சிவராத்திரி பூஜைவழிபாடுகள்சிறப்பாகஇடம்பெற்றன.

தற்போதுள்ள நிலைமை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன்சுகாதாரநடைமுறைகளைபின்பற்றி சிவராத்திரி பூசை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# சர்ச்சையில் சபாநாயகர்

ரஞ்சன் ராமநாயக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி உரிய முறையில் அப்படியே தொடர வேண்டும் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நாடாளுமன்றுக்கு அறிவித்திருந்தும் –

அவரை நாடாளுமன்ற அமர்வுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது, அவரின் நாடாளுமன்ற விதி முறையை நீடிப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றில் எடுக்காமல் நிராகரிப்பது ஆகியவற்றின் மூலம் சபாநாயகர் பக்கச் சார்பாக செயற்படுகின்றார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

இந்தக் குற்றச்சாட்டிற்கு வலுவான ஆதாரங்களும் பின்புலங்களும் இருக்கின்றன.

நாட்டில் நீதி முறையான ஜனநாயக ஆட்சிக்கு மூன்று முக்கிய விடயங்கள் அவசியமானவை.

ஒன்று – நிறைவேற்றதிகாரம். அது இலங்கையில் ஜனாதிபதி வசம் உள்ளது.

அடுத்தது – சட்டவாக்கல் அதிகாரம். அது இங்கு நாடாளுமன்றத்தின் மூலம் பிரயோகிக்கப்படுகின்றது.

மூன்றாவது – நீதித்துறை அதிகாரம். இலங்கையில் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள் மூலம் இது கையாளப்படுகின்றது.

இந்த மூன்றும் ஒன்றில் ஒன்று தலையிடாமலும், ஒன்றில் ஒன்று தங்காமலும், சுயாதீனமாகவும், அதே நேரம் ஒத்திசைந்தும் செயல்பட்டால்தான் ஜனநாயக ஆட்சி முறை மேன்மையுறும் என்பர். ஜனநாயகம் என்ற மூன்று முகக் கும்பின் ஒவ்வொரு முகங்களே இந்த மூன்றும் என்றும் குறிப்பிடுவர்.

அந்த வகையில் நீதித்துறை நடவடிக்கையில் சட்டவாக்கல் துறையான நாடாளுமன்றம் தலையிட கூடாது. அதே போல நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளில் நீதித்துறை தலையை நுழைக்கக் கூடாது. இது நியாயமான ஏற்பாடு.

ஆனால், தனது நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிட முடியாது என்பதற்காக –

நாடாளுமன்றத்தில் தனது தரப்புக்கு அபரிமிதமான ஆதரவு இருக்கின்றது, தன்னை அசைக்க முடியாது என்பதற்காக –

சபாநாயகர் ஆசனத்தில் இருப்பவர் தான்தோன்றித்தனமாக நடக்கக் கூடாது. எதேச்சாதிகாரமான முடிவுகளை எடுக்கக் கூடாது. சபாநாயகர் ஆசனம் என்ற பாரம்பரிய இருக்கைக்குரிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க பெருமையை சிதைத்தழிக்கின்றமை போல நடக்கக் கூடாது.

ரஞ்சன் ராமநாயக்கா எம்.பிக்கு நீதிமன்றம் வழங்கிய தண்டனை, அவரது எம்.பி. பதவியை பாதிக்கக் கூடிய ரகத்தைச் சேர்ந்தது அல்ல என்பது ரஞ்சன் தரப்பின் வாதம்.

அதை உறுதிப்படுத்தி உத்தரவிடக் கோரி ரஞ்சன் ராமநாயக்கா தரப்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுச் செய்யப்பட்டுள்ளது. அந்த மனு பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதையொட்டி நீதிமன்றம் ஓர் இடைக்கால உத்தரவை பிறப்பித்திருக்கின்றது. அது தெளிவான, திட்டவட்டமான உத்தரவு. சந்தேகத்துக்கு அப்பால் தெளிவான உத்தரவு.

நீதிமன்ற விசாரணை முடியும் வரை ரஞ்சன் ராமநாயக்காவின் எம்.பி. பதவியை வறிதாக்க நடவடிக்கை எடுக்க வேண்டாம். அவர் அப்பதவியில் தொடர்கின்றார். அவர் பதவி தொடர்பான நிலைமை இப்போது உள்ளபடி அப்படியே தொடர வேண்டும். (Status quo must be maintained)

– இப்படி நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தைப் பணித்திருக்கின்றது மேன்முறையீட்டு நீதிமன்றம்.

சபாநாயகருக்கும், அவரது ஆளணித் தொகுதியினருக்கும் இந்த உத்தரவின் அர்த்தம் புரியாததல்ல. சபாநாயகருக்கு நீதிமன்றம் உத்தரவிடக் கூடாது. உத்தரவிட முடியாது. அதனால்தான் ரஞ்சனின் வழக்கில் இடைக்கால உத்தரவு நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு நீதிமன்றம் அனுப்பியுள்ளது.

அதேசமயம், ரஞ்சனும் வழங்கப்பட்ட தண்டனைப் பிரகாரம் அவர் எம்.பி. பதவியை இழக்கின்றாரா, அல்லது அந்தப் பதவியை அந்தத் தண்டனை பாதிக்காதா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது நீதிமன்றமே தவிர, சபாநாயகர் அல்லர்.

ஆகவே, நீதிமன்றம் அக்கடமையைச் செய்வதற்கு இடமளித்து ஒத்துழைத்து செயற்படுவதே சபாநாயகரின் கடமையன்றி, அதற்கு முட்டுக்கட்டை போடுவதல்ல.

தான் தீர்ப்பளிக்கும் வரை – மறு உத்தரவு வழங்கும் வரை – ரஞ்சனின் எம்.பி. பதவி இருக்கின்ற நிலையில் அப்படியே தொடர வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமையால் அதை உறுதிப்படுத்துவதே சபாநாயகரின் பொறுப்பான கடமையாக இருக்குமே தவிர, அந்த விடயத்தைக் குழப்புவது அல்ல.

ரஞ்சனின் எம்.பி. பதவி அப்படியே தொடர வேண்டும் என்று நீதிமன்றம் Status quo உத்தரவு பிறப்பித்திருக்க, மறுபுறத்தில் தொடர்ந்து சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக் கின்றமையால், அதன் காரணமாக தொடர்ந்து மூன்று மாதங் கள் நாடாளுமன்றுக்கு வராதமையை ஒட்டி அவரின் எம்.பி.பத வியை பறிப்பதற்கு சபாநாயகர் இடமளித்துப் பார்த்திருப்பது அல்லது அத்தகைய நிலைக்கு ஒத்துழைப்பது நீதித்துறை நடவடிக்கையை குழப்புவதற்கு இடமளிக்கும் 'குசும்புத்தனம்' தான். அதைத்தான் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

# தமிழ் மக்கள் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்!

## சிறிதரன் எம்.பி. காட்டம்



தமிழர்கள் தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 22 ஆம் திகதி ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடர் மார்ச் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இம்முறையும் தமிழர் இயக்கத்தின் ஒருங்கிணைப்பில் பன்னாட்டுத் தளங்களில் தமிழர் இயக்கத்துடன் இணைந்து செயல்படும் ஐ.நா வின் அங்கீகாரம் பெற்ற அமைப்புகளின் ஊடாக இந்தக் கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் தமிழர் உரிமைச் செயற்பாட்டாளர்கள் கொரோனாத் தொற்று காரணமாக இணைய வழி ஊடாக கூட்டத்தொடரில் இணைந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது உரையாற்றிய அவர் –

அரசாங்கத்தால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர் என ஐ.நாவின் மனித உரிமைப் பேரவையின் உயர் ஆணையாளரும் 10 சிறப்பு பொறிமுறை அதிகாரமுள்ளவர்களும் தங்களது அறிக்கையில் சுட்டிக்காட்டியதற்கு நன்றி தெரிவிக்கிறோம்.

ஆனால் அவர்கள் தமிழர்கள் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று கூறுவதற்கு மறந்துவிட்டனர்.

இலங்கையில் உள்ள வடக்கு கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் இன அழிப்புசெய்யப்பட்டு 12 ஆண்டுகள் முடிந்து இன்னும் காலநீடிப்பு தர இந்தப் பேரவை விரும்புகிறது.


தமிழர்கள் தொடர்ந்து இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இராணுவ அடக்குமுறைக்கு கீழ் தங்களது பண்பாட்டு, சமூக, பொருளாதார, அரசியல், குடியுரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கின்றனர்.

கீழ்காணும் பரிந்துரைகளை வைத்து இலங்கைமீது தீர்மானம் கொண்டுவரும் முக்கிய குழுவும் மனித உரிமை உறுப்பினர்களும் உறுதியான தீர்மானத்தை கொண்டுவர கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையை பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும். சுதந்திரமான பன்னாட்டு விசாரணை பொறிமுறை நடத்தவேண்டும். இலங்கைக்கான சிறப்பு ஆய்வாளரை நியமிக்கவேண்டும்.

தமிழர்களின் சுய நிர்ணய உரிமையையும் அவர்களின் எதிர்பார்ப்புகளையும் அறிந்து உறுதி செய்ய ஐ.நாவின் மேற்பார்வையில் வாக்கெடுப்பு நடத்தவேண்டும்.– எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தேசியக் கொடியின் வடிவில் வடிவமைக்கப்பட்ட தரைவிரிப்பு!





இலங்கையின் தேசிய கொடியுடன் வடிவமைக்கப்பட்ட தரைவிரிப்புகள் தற்போது விற்பனைக்கு வந்துள்ள படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

பொருள்களை இணையத்தளத்தில் விற்பனை செய்யும் உலகின் முன்னணி இணையத்தள பொருள் விற்பனை தளமான அமெசோன் இல் இவ்வாறு இலங்கை கொடியை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட தரை விரிப்புகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த தரைவிரிப்பு 12 டொலருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இவ்வாறு இலங்கையின் தேசியக் கொடியுடனான தரைவிரிப்புக்கள் விற்பனை செய்யப்படுகின்றமைக்கு எதிராக பலரும் பல்வேறு கருத்துக்களை சமூக ஊடகங்களில் தெரிவித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அத்தியாவசியப் பொருள்கள் சிலவற்றின் விலை குறைப்பு!

சதொச விற்பனை நிலையங்கல் பெரிய வெங்காயம், சிவப்பு பச்சை அரிசி மற்றும் உள்நாட்டு கிழங்கு உள்ளிட்ட சில பொருள்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, சந்தையில் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 195 ரூபாவுக்கும், உள்நாட்டு கிழங்கு 150 ரூபாவுக்கும், சிவப்பு பச்சை அரிசி 89 ரூபாவுக்கும் சதொச விற்பனை நிலையங்களில் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த விலைக்குறைப்பு நடவடிக்கை இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கடந்த பெப்ரவரி மாதம் கொண்டுவரப்பட்ட 27 பொருள்களுக்கான விலைக் குறைப்பு அதேநிலையில் கொள்ளப்படுமெனவும் வர்த்தக அமைச்சு அறிவித்துள்ளது.

# பிரிஸ்பேனில் 5 பெண்களை பாலியல் வன்கொடுமை செய்த இலங்கை பிரஜைக்கு மூன்று ஆண்டுகள் சிறை!

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கைப் பிரஜையொருவருக்கு குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 44 வயதான சம்பத் சமரநாயக்க என்பவருக்கே இவ்வாறு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு (2018) பிரிஸ்பேனின் இரவுவிடுதியொன்றில் தன்னை, டெக்ஸி வாகன சாரதியாக போலியாக அடையாளம் காட்டி, ஐந்து பெண்களை அழைத்துச் சென்றுள்ளதுடன், அவர்களை பாலியல் வன்கொடுமை செய்தார் எனவும் அவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

அவர் மீது பிரிஸ்பேன் மாவட்ட நீதிமன்றத்தில் பாலியல் வன்கொடுமைகள், சுதந்திரத்தை பறித்தல், அநாகரிகமான செயல்கள் மற்றும் பொதுவான தாக்குதல் உள்ளிட்ட 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இந் நிலையில் நேற்று வியாழக்கிழமை 18 குற்றச்சாட்டுகளிலும் அவர் குற்றவாளி எனக் கண்டறிய நடுவர் மன்றம் மூன்று மணி நேரத்துக்கும் குறைவான நேரத்தை எடுத்தது.

# தண்டி யாத்திரை தினத்தன்று காந்தி சிலைக்கு மரியாதை

உப்புச் சத்தியாக்கிரகத்தின் 91ஆம் ஆண்டு விழாவையொட்டி சபர்மதி ஆசிரமத்தில் உள்ள காந்தி சிலைக்குப் பிரதமர் நரேந்திர மோடி நூல்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ஆங்கிலேயர் ஆட்சியில் உப்புக்கு வரி விதித்ததைக் கண்டித்து 1930ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் நாள் குஜராத்தின் சபர்மதி ஆசிரமத்தில் இருந்து தண்டி என்னுமிடத்திற்கு காந்தியடிகள் நடைப்பயணத்தைத் தொடங்கினார். அதன் 91ஆம் ஆண்டு விழாவையொட்டி சபர்மதி ஆசிரமத்துக்குச் சென்ற பிரதமர் நரேந்திர மோடி, காந்தி சிலைக்கு நூல் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ஆசிரமத்தில் வைக்கப்பட்டுள்ள காந்தியின் படங்கள், அவர் பயன்படுத்திய பொருள்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டார். தண்டி யாத்திரையை நினைவு கூரும் வகையில் நடைபெற்ற விழாவில் இசைக் கலைஞர்கள் தேசபக்திப் பாடல்கள், பல் சமயப் பாடல்களைப் பாடினர். நாட்டிய நிகழ்ச்சி பார்வையாளர்களைப் பெரிதும் கவர்ந்தது.



## ஸ்ரீகாளஹஸ்தி சிவன் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதல்



ஸ்ரீ காளஹஸ்தி சிவன் கோவிலில் வருடாந்திர மகாசிவராத்திரி பிரம்மோற்சவ விழா நடந்து வருகிறது. விழாவின் 6 ஆவது நாளான நேற்று அதிகாலை 3 மணியளவில் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். நேற்று ஒரேநாளில் லட்சம் பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

கோவில் வளாகம் முழுவதும் பழங்கள், மலர்கள், மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது. சாமி தரிசனம் செய்ய சென்ற பக்தர்களுக்கு குடிநீர், மோர் மற்றும் குழந்தைகளுக்கு பால் ஆகியவை வழங்கப்பட்டன.

பக்தர்களுக்கு தட்டுப்பாடு இன்றி விநியோகம் செய்ய லட்டு, அன்னப் பிரசாதம் ஆகியவை கூடுதலாக தயாரித்து இருப்பு வைக்கப்பட்டு இருந்தன. இதுதவிர சாமி தரிசனம் செய்த பக்தர்களுக்கு இலவச பிரசாதங்களும் தேவஸ்தானம் சார்பில் வழங்கப்பட்டது.

கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் வசதிக்காக சொர்ணமுகி ஆற்றில் தேவஸ்தான அதிகாரிகள் குளியல் அறைகள் மற்றும் குழாய்கள் அமைத்திருந்தனர். அதில் பக்தர்கள் புனித நீராடினர். பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தியும், முன்னோர்களுக்கு திதி கொடுத்தும் சாமி தரிசனம் செய்தனர்.

கோவில் அருகில் தூர்ஜெட்டி கலையரங்கத்தில் நேற்று காலையில் இருந்து இரவு முழுவதும் மற்றும் இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலையிலும் கலை நிகழ்ச்சிகள், ஆன்மிக சொற்பொழிவு, நாட்டிய நடன நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

கண் விழித்து சாமி தரிசனம் செய்த பக்தர்களுக்காக பல்வேறு பகுதிகளில் அன்னதானம், குடிநீர் மற்றும் குளிர்பானம் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டது. அதேநேரம் நகரில் கடும் வாகனப் போக்குவரத்து நெரிசல் காணப்பட்டதுடன் முக்கிய நபர்கள் மட்டுமே நகருக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

## மம்தா பானர்ஜிக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதால் சக்கர நாற்காலியில் அமர்ந்து பிரச்சாரம் செய்ய திட்டம்



காலில் எலும்பு முறிவு ஏற்பட்ட நிலையில் நந்திகிராம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி சக்கர நாற்காலியில் அமர்ந்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

அடுத்த இரண்டு மூன்று நாள்களில் பிரச்சாரத்தைத் தொடர இருப்பதாக தெரிவித்துள்ள மம்தா பானர்ஜி தம்மை யாரோ தள்ளிவிட்டதால் காயம் ஏற்பட்டதாக கூறியுள்ளார்.

இதனிடையே மருத்துவமனை வட்டாரம் வெளியிட்டுள்ள மருத்துவக் குறிப்பில் மம்தா பானர்ஜி உடல் நலம் தேறி வருவதாகவும் உடலில் சோடியம் அளவு குறைவாக இருப்பதாகவும் உரிய சிகிச்சைகள் அளிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மோடியின் தாயாருக்கு தடுப்பூசி



பிரதமர் மோடியின் தாயான ஹிரபா (வயது 95), மோடியின் இளைய சகோதரரான பங்கஜ் மோடியுடன் குஜராத்தின் காந்திநகர் அருகே உள்ள ரெய்சன் கிராமத்தில் வசித்து வருகிறார். நாடு முழுவதும் தற்போது 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி போடப்பட்டு வரும் நிலையில், மோடியின் தாய் ஹிரபாவும் நேற்று தடுப்பூசி போட்டுக்கொண்டார். இந்த தகவலை பிரதமர் மோடி தனது டுவிட்டர் தளத்தில் வெளியிட்டிருந்தார்.

அவர் கூறுகையில், 'எனது தாய் இன்று (நேற்று), முதல் டோஸ் தடுப்பூசி போட்டுக்கொண்டார் என்பதை தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களைச் சுற்றி இருக்கும் தகுதி வாய்ந்த நபர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள உதவவும், ஊக்கப்படுத்தவும் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டு இருந்தார். குஜராத்தில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் உள்பட 17.13 லட்சத்துக்கு அதிகமானோர் இதுவரை தடுப்பூசி போட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் அ.தி.மு.க. தனித்து போட்டியா?

AIADMK

BJP

புதுச்சேரியில் தேசிய ஜனநாயக கூட்டணி தொகுதி பங்கீட்டில் பா.ஜ.க. – அ.தி.மு.க. இடையே இழுபறி நீடித்து வரும் நிலையில், அ.தி.மு.க. தனித்து போட்டியிட நிர்வாகிகள் சிலர் விருப்பம் தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

புதுச்சேரியில் மொத்தமுள்ள 30 சட்டமன்ற தொகுதிகளில் என்.ஆர். காங்கிரஸ் 16 இடங்களில் போட்டியிடுகிறது. மீதமுள்ள 14 இடங்களை பிரித்துக் கொள்வதில் பா.ஜ.க. – அ.தி.மு.க. இடையே இழுபறி நீடிக்கிறது.

அ.தி.மு.க. கூடுதல் தொகுதிகளை ஒதுக்க கோருவதால், பல கட்டப் பேச்சுக்களுக்கு பின்னரும் உடன்பாடு எட்டப்படவில்லை.

இன்று மாலைக்குள் இருதரப்பிலும் உடன்பாடு எட்டப்பட்டு, ஒப்பந்தம் கையெழுத்தாகும் என கூறப்பட்ட நிலையில், அ.தி.மு.க. தனித்து போட்டியிட நிர்வாகிகள் சிலர் தலைமைக்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக சொல்லப்படுகிறது.

## 75 ஆவது சுதந்திர தினவிழா கொண்டாட்டங்களை குஜராத்தில் தொடக்கி வைக்கிறார் பிரதமர் மோடி



நாட்டின் 75 ஆவது சுதந்திர தினம் 'அம்ரித் மகோத்சவ்' என்ற பெயரில் கொண்டாடப்பட உள்ளது. நாடு முழுவதும் 75 இடங்களில் 75 வாரங்களுக்கு கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்நிலையில், குஜராத் மாநிலத்தின் சபர்மதி ஆசிரமத்தில் நடக்கும் நிகழ்ச்சியை பிரதமர் மோடி இன்று தொடக்கி வைத்தார்.

75 ஆவது சுதந்திர தினம் 2022ல் கொண்டாடப்பட உள்ளது. அந்தக் கொண்டாட்டத்தின் தொடக்க விழா, குஜராத்தின் சபர்மதி ஆசிரமத்தில் இன்று தொடங்குகிறது.

நாட்டின் 75 இடங்களில், 75 வாரங்களுக்கு கொண்டாட்டங்கள் நடக்க உள்ளன. அதைத் தவிர, சபர்மதி ஆசிரமத்தில் இருந்து தண்டிக்கு 21 நாள்கள் நடை பயண இயக்கத்தையும் பிரதமர் மோடி ஆரம்பித்து வைக்கிறார்.

நாட்டின் 75 ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்டங்களில் எம்.பிக்களும், அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள வேண்டும் என பிரதமர் கேட்டுக்கொண்டார்.

D.C.M$_N$ - யாழ் நகர்
A/L 2023 கலை, வர்த்தக வகுப்புக்கள்
வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.
கலைப்பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்
தமிழ் வழமையான முன்னணி ஆசிரியர்
➤ புவியியல் P.S.V. தினேஸ்
➤ இந்துநாகரிகம் T.ஸ்ரீஸ்
➤ அரசியல் பொன் சந்துரு
➤ வரலாறு S.S.Y. பிரதீபன்
➤ அளவையியல் T.T.நீதன்
➤ ஊடகக்கல்வி N. தீபன்
➤ ICT லவேந்திரன்
➤ நாடகமும் அரங்கியலும் M. ஜங்கரன்
➤ கிறிஸ்தவ நாகரிகம் J.J. வசந்தன்
➤ விவசாய விஞ்ஞானம் B.பாலசுதன்
வர்த்தகப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்
➤ பொருளியல் ஜஸ்க்கு
➤ ார்
➤ கணக்கீடு S. தவா
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமையில்
D.C.M$_N$ - நிர்வாகி 077 011 9434

# இந்தோனேசியாவில் பஸ் விபத்து; பள்ளத்தில் விழுந்ததில் 27 பேர் பலி



இந்தோனேசியாவில் மேற்கு ஜாவா மாகாணத்தில் சுபாங் என்ற இடத்தில் ஒரு இஸ்லாமிய பாடசாலை உள்ளது. அந்தப் பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், டாசிக்மலாயா மாவட்டத்தில் உள்ள புனித தலத்துக்கு நேற்று முன்தினம் சென்று விட்டு பஸ்ஸி திரும்பிக்கொண்டிருந்தனர்.

இரவு நேரத்தில் பஸ், சுமேதாங் மாவட்டத்தில் வந்து கொண்டிருந்தபோது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, தாறுமாறாக ஓடி 20 மீற்றர் பள்ளத்தில் விழுந்து விட்டது. பஸ்ஸில் இருந்தவர்கள் அலறினர். உடனடியாக மீட்புப் பணி முடுக்கி விடப்பட்டது.

இந்த கோர விபத்தில் 27 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக உயிரிழந்தனர். 39 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். பலியானவர்கள் உடல்கள் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த விபத்துக்கு காரணம் பஸ்ஸில் தடுப்பு செயல்படாதது தான் என விபத்தில் படுகாயங்களுடன் உயிர் தப்பியவர்கள் தெரிவித்தனர். இந்தோனேசியாவில் சாலைகள் மோசமாக இருப்பதால் விபத்துக்கள் நடப்பது சாதாரணமான ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2019 ஆம் ஆண்டு அங்கு ஒரு பஸ் 80 மீற்றர் பள்ளத்தில் விழுந்ததில் 35 பேர் உயிரிழந்தமை நினைவு கூரத்தக்கது.

# சர்ச்சைக்குரிய நீர் மின் திட்டம் சீனா நாடாளுமன்றம் ஒப்புதல்

திபெத்தின் பிரம்மபுத்ரா நதியில் சர்ச்சைக்குரிய நீர்மின் திட்டம் உட்பட 60 திட்டங்களுக்கு சீன நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

சீனா 6 நாள் நாடாளுமன்ற கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தின் கடைசி நாளான நேற்று 60 திட்டங்களைக் கொண்ட ஒரு மேம்பாட்டு வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.திபெத்தின் பிரம்மபுத்ரா நதியில் சர்ச்சைக்குரிய நீர்மின் திட்டம் உட்பட பல ஆயிரம் கோடி மதிப்புள்ள திட்டங்களை உள்ளடக்கிய மெகா வரைபட திட்டங்களுக்கு சீன நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. இது இந்தியாவுக்கு புதிய சிக்கலை உருவாக்கியுள்ளது.



# பஸ் மீது லொறி மோதியதில் மெக்சிக்கோவில் 11 பேர் பலி

மெக்சிக்கோவில் டீசல் லொறி மோதி பயணிகள் பஸ் கவிழ்ந்தமையால் 11 பேர் உயிரிழந்தனர்.

Nuevo Leon மாகாண நெடுஞ்சாலை வழியாக சென்ற பயணிகள் பஸ் மீது டீசல் லொறி மோதியது.

இதையடுத்து பஸ் நிலைகுலைந்து சாலையில் கவிழ்ந்ததில் 11 பயணிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 7 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.




# கடன் தொகையை திருப்பிச் செலுத்த பாகிஸ்தானுக்கு காலக்கெடு விதிப்பு

கடனாக வாங்கிய 100 கோடி டொலர் தொகையை இன்று இரவுக்குள் திருப்பித் தர வேண்டும் என்று ஐக்கிய அரபு இராச்சியம் (U.A.E.) காலக்கெடு விதித்துள்ளமையால் பாகிஸ்தான் அரசில் பரபரப்பு நிலவுகிறது.

அதிகாரிகள் பதற்றத்துடன் ஆலோசித்து வருகின்றனர். இத்தொகை பாகிஸ்தானின் State வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டது. அதன் முதிர்வுத் தொகை மார்ச் 12 ஆம் திகதி நிறைவு பெறுகிறது.

இப்பணத்தைத் திருப்பித் தருமாறு ஐக்கிய அரபு இராச்சியம் (U.A.E.) கோரியுள்ளது.

பட்டத்து இளவரசரை சந்தித்து கால அவகாசம் கேட்பதற்கான முயற்சியில் பாகிஸ்தான் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

# நிறவெறி குற்றச்சாட்டை வில்லியம் மறுக்கிறார்



இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் – டயானா தம்பதியின் இளைய மகனான ஹாரியும், அவரது மனைவி மேகனும், அரச குடும்பத்தில் இருந்து கடந்த ஆண்டு வெளியேறினர்.

இதற்கான காரணத்தை வெளியிடாமல் மௌனம் சாதித்து வந்த அவர்கள், சமிபத்தில் பிரபல டி.வி. நிகழ்ச்சி தொகுப்பாளர் ஓப்ரா வின்பிரேயின் நிகழ்ச்சியில் அதை வெளியிட்டனர். குறிப்பாக இங்கிலாந்து அரச குடும்பத்தில் மேகன் அனுபவித்த சவால்களை அவர்கள் வெளிப்படுத்தினர்.

அதாவது, திருமணமான ஆரம்பத்தில் அரச குடும்பத்தில் தான் தனிமைப்படுத்தப்பட்டதாகவும், இதனால் மன அழுத்தம் அதிகரித்து தற்கொலை எண்ணம் கூட ஏற்பட்டதாக மேகன் அதிர்ச்சி குற்றச்சாட்டை தெரிவித்தார்.

மேலும் ஆபிரிக்க – அமெரிக்க வம்சாவளியைச் சேர்ந்த மேகன் கர்ப்பமாக இருந்தபோது, அவருக்கு பிறக்கப்போகும் குழந்தையின் நிறம் குறித்து அரச குடும்பத்தினர் கவலைப்பட்டதாக அவர்கள் கூறியது உலகின் கவனத்தை இங்கிலாந்து அரச குடும்பத்தை நோக்கி திருப்பி இருக்கிறது.

ஒரு காலத்தில் இங்கிலாந்தின் காலனி நாடுகளாக இருந்த நாடுகள் இந்த விவகாரத்தை இன்னும் தீவிரமாக எடுத்துக் கொண்டு இருக்கின்றன. ஹாரி – மேகனின் இந்த குற்றச்சாட்டுகள் இங்கிலாந்து அரச குடும்பத்திலும் பூகம்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இது தொடர்பாக அரச குடும்பத்தினர் யாரும் நேரடியாக பதிலளிக்காத நிலையில், இங்கிலாந்து ராணி சமீபத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இருந்தார். அரச குடும்பத்தினர் மீதான நிறவெறி புகார் அதிர்ச்சி அளிப்பதாக அவர் அதில் குறிப்பிட்டு இருந்தார்.

இந்த நிலையில் ஹாரியின் சகோதரருமான வில்லியம் நேற்று முதல் முறையாக தனது தம்பி மற்றும் அவரது மனைவியின் இந்த நிறவெறி புகாரை மறுத்து உள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறுகையில், 'இங்கிலாந்து அரச பரம்பரை ஒரு இனவெறி குடும்பம் அல்ல' என்று தெரிவித்தார்.

இந்த குற்றச்சாட்டுக்குப்பின் ஹாரியிடம் பேசினீர்களா? என செய்தியாளர்கள் கேட்டதற்கு, 'இல்லை' என பதிலளித்த அவர், எனினும் அவரிடம் இது குறித்து பேசுவேன் எனவும் கூறினார்.

ஹாரி – மேகன் தம்பதியின் இனவெறி குற்றச்சாட்டுக்கு நேரடியாக பதிலளித்த அரச குடும்பத்து முதல் உறுப்பினர் வில்லியம் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கர் ஒவ்வொருவருக்கும் கொரோனா நிதி: பிரேரணையில் கையெழுத்திட்டார் ஜோ பைடன்

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்தபடியே இருக்கிறது. கொரோனா பரவல் காரணமாக அமெரிக்காவில் கோடிக்கணக்கானோர் வேலைகளை இழந்தனர். இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இதற்கிடையே அமெரிக்காவில் புதிய அதிபரான ஜோ பைடன் பொருளாதாரத்தை மீட்டெடுக்க 1.9 லட்சம் கோடி அமெரிக்கடொலர் செலவில் கொரோனா நிவாரண நிதி திட்டத்தைக் கொண்டு வந்தார்.



இந்த கொரோனா நிவாரண நிதி பிரேரணை அமெரிக்க செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது. அதன்பின் பிரதிநிதிகள் சபையிலும் நிறைவேறியது.

இந்நிலையில், கொரோனா நிவாரண நிதி பிரேரணையில் அதிபர் ஜோ பைடன் இன்று கையெழுத்திட்டார் என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி தெரிவித்தார்.

இந்த பிரேரணையால் 85 சதவீத அமெரிக்க குடும்பங்கள் பயன்பெறும். இந்த மாதத்துக்குள் அமெரிக்கர்களுக்கு தலா 1,400 டொலர் (இந்திய மதிப்பில் ரூ. 1லட்சம்) வழங்கும் பணி தொடங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# முக்கிய உதிரிப்பாகங்கள் விலை உயர்வால் டி.வியின் விலைகளை உயர்த்தும் திட்டம்!

ஸிசிம் டிவி தயாரிப்பில் முக்கிய உதிரிப்பாகமாக கருதப்படும் ஓபன் செல் பேனல்களின் விலை உயர்ந்துள்ளால் ஏப்ரல் முதல் டி.வி விலையை உயர்த்த முன்னணி நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன.

சர்வதேச சந்தைகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஓபன் செல் பேனல்களை கொண்டு உள்நாட்டில் ஸிசிம் டி.விக்கள் தயாரிக்கப்படும் நிலையில், அவற்றின் விலை 35 சதவீதம் உயர்ந்துள்ளது.



இதன் காரணமாக, ஏப்ரல் முதல் டி.வி விலையை 5 முதல் 7 சதவீதம் உயர்த்த திட்டமிட்டுள்ளதாக பனசோனிக் நிறுவனத்தின் இந்திய பிரிவுத் தலைவர் மணீஷ்ர்மா தெரிவித்துள்ளார்.

அதே போல, தாம்ஸன் மற்றும் கோடக் டி.விக்களை தயாரித்து வரும் சூப்பர் பிளாஸ்டிரானிக்ஸ் நிறுவனமும், ஏப்ரல் முதல் டி.வி விலையை 5 ஆயிரம் முதல் 8 ஆயிரம் ரூபாய் வரை உயர்த்த திட்டமிட்டுள்ளது.

# ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசியை உபயோகிக்க ஐரோப்பிய ஒன்றியம் அனுமதி




ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்தின் தடுப்பூசியை பொதுப் பயன்பாட்டுக்கு உபயோகிக்க ஐரோப்பிய ஒன்றியம் அனுமதி அளித்து உள்ளது.

கொரோனாவுக்கு எதிரான போரில் ஜான்சன் அண்ட் ஜான்சன் நிறுவனத்தின் ஒருமுறை மட்டும் செலுத்தக்கூடிய தடுப்பூசி முக்கிய இடத்தை பிடித்து உள்ளது. இந்த நிலையில் ஜான்சன் அண்ட் ஜான்சன் தடுப்பூசியை அவசர பயன்பாட்டுக்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் மருந்து கட்டுப்பாட்டு ஆணையத்தின் சுகாதார இயக்குநர் ஸ்ட்டெல்லா கிரியாக்கிட்ஸ் (Stella Kyriakides) அறிவிப்பு வெளியிட்டு உள்ளார்.

# வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்தில் இடம்பெறும் மண் அகழ்வை நிறுத்துமாறு மீனவர்கள் கோரிக்கை

வாழைச்சேனைமீன்பிடித்துறைமுகத்தில்இடம்பெறும் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராச்சி திட்டத்தினை உடனடியாக நிறுத்துமாறும் மண்ணை வெளி பிரதேசங்களுக்கு கொண்டு செல்ல வேண்டாம் என்றும் பிரதேச மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை மீன்பிடி துறைமுகத்தில் மண் ஏற்றப்பட்ட வாகனத்தின் முன்னால் வாகனத்தை செல்ல விடாது தடுத்து தங்களது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



இலங்கை மீன்பிடித்துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தின் மணல் கழுவுதல் மற்றும் அகழ்வாராச்சி திட்டத்திற்கு அமைய மீன்பிடி துறைமுக பிரதேசம் தோண்டப்படும் மண் அகழ்வினாலும் மண்ணை கழுவும் உப்பு நீர் மீண்டும் பிரதேசத்திற்குள் செல்வதாலும் எங்களது பிரதேசம் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதால் மண் அகழ்வு நடவடிக்கையினையும் மண் கழுவும் வேலைத்திட்டத்தினையும் நிறுத்துமாறு கோரியே பிரதேச மீனவர்கள் தங்களது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த இடத்திற்கு வருகை தந்த வாழைச்சேனை பொலிஸார் குறித்த மண் அகழ்வில் ஈடுபடும் அதிகாரிகள் மற்றும் பிரதேச மீனவர்களுடனும் கலந்தாலோசித்து வாகனத்தில் ஏற்றப்பட்ட இரண்டு மண் லோடுகளையும் செல்வதற்கு விடுவது என்றும் இன்று வெள்ளிக்கிழமை இரண்டு தரப்பினரும் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்து மேற்கொண்டு மண் தோண்டுவதா அல்லது நிறுத்தவதா என்ற முடிவுக்கு வரும் வரையில் மண் அகழ்வது மற்றும் மண்ணை அவ்விடத்தில் இருந்து வேறு பிரதேசங்களுக்கு ஏற்றுவதில்லை என்று பொலிஸார் தெரிவித்தன் பின்னர் அவ்விடத்தில் கூடிய மீனவர்கள் கலைந்து சென்றனர்.

# போதைப்பழக்கத்திலிருந்து இளைஞர்களை பாதுகாக்க மட்டக்களப்பில் பல்வேறு வகையில் வேலைத்திட்டங்கள்



மாணவர்களை தற்காப்பு கலையில் ஆர்வத்தினை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் புரையோடிப்போயுள்ள இளவயதினரை போதைப்பழக்கத்தில் இருந்து பாதுகாக்கும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதன் அடிப்படையில் வாழைச்சேனை செம்மண்ணோடை சோட்டாக்கன் கராத்தே மற்றும் தற்காப்புக் கலை பாடசாலையின் ஏற்பாட்டில் ஒரு நாள் கராத்தே பயிற்சி பட்டறையும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மீராவோடை அமீர் அலி கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சவாட் சம்மேளனத் தலைவரும், சோட்டாக்கன் கராத்தே மற்றும் தற்காப்புக் கலை பாடசாலையின் பணிப்பாளருமான எம்.எஸ்.வஹாப்தீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.அஜ்மீர், மீரா கலீல், வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் பி.எஸ். கபூர், செம்மண்ணோடை சாதுலியா வித்தியாலய, அதிபர் எம்.ஐயூப், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொலிஸ் மா அதிபர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம்



பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு முதன்முறையாக விஜயம் செய்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள விடுதியில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரிகளுடனான பேச்சுக்களில் பொலிஸ் மா அதிபர் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, கந்தளாய் ஆகிய பொலிஸ் பிராந்தியங்களைச் சேர்ந்த பிரதி பொலிஸ் மா அதிபர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், மாகாணத்திலுள்ள 48 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதன்போது பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமான கலந்துரையாடல் பிற்பகல் 2.00 மணிக்கு முடிவடைந்த போதிலும் ஊடகவியலாளர்கள் குறித்த கலந்துரையாடலில் செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மனக்கவலை முகாமைத்துவ பயிற்சிப்பட்டறை

*அம்பாறை, செப்.12*

*மனக்கவலை முகாமைத்துவம் தொடர்பிலான பயிற்சிப்பட்டறையொன்று அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிமன்ற தலைவர்களுக்கு நடாத்தப்பட்டது.*

*ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்ட அனுசரணையுடன் எஸ்.எல்.ஜி. நிறுவனத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சித்திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் அம்பாறை நகரசபை விடுதியில் நேற்று முன்தினம் முழுநாளும் இந்த பயிற்சி நடைபெற்றது.*

*கிழக்குமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர் ஆ.ஞா.தெய்வேந்திரன் பிரதான வளவாளராக செயற்பட்டார்.*

*அம்பாறை மாவட்ட உள்ளூராட்சிசபைகளின் தலைவர்கள் உபதலைவர்கள் செயாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.*







# பஸ் – மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் விபத்து அந்த இடத்திலேயே இளைஞன் பரிதாபகரமாக மரணம்

ஹொரவ்பொத்தானை – கபுகொல்லாவ பிரதான வீதியில், நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிளொன்று மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



ருவன்வெளி மத்திய மகா வித்தியாலயத்தில் சாதாரண தரத்தில் கல்வி பயின்று வந்த ஹொரவ்பொத்தானை – 01ஆம் கட்டை மொரகொட, மூதலான பகுதியைச் சேர்ந்த ஆர்.எம்.கே.எம்.த. சில்வா (16 வயது) எனும் இளைஞனே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஹொரவ்பொத்தானையிலிருந்து வாகொல்லாகட பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞன், உழவு இயந்திரம் மற்றும் கப் ரக வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட போது, இவ்விபத்து இடம்பெற்றதாகவும் பஸ் சாரதியின் அசமந்தப் போக்கினால் விபத்து சம்பவித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸின் சாரதியைக் கைது செய்துள்ளதாகவும் அவரை கெப்பித்திக்கொல்லாவ நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் ஹொரவ்பொத்தானை பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் ஒருவாரத்துக்கான மின் துண்டிப்பு அறிவிப்பு

கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் அவசரத் திருத்த வேலை காரணமாக மின்துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமை (13) கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை ஆகிய மின்பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட தரவைக் கோவில், கடற்கரைப்பள்ளி, அம்மன் கோவில், இஸ்லாமாவாத் வீட்டுத் திட்டம், உடையார் வீதி, அம்பாறை பிரதான வீதி, கல்முனை பிரதான வீதி, வீரமுனை, புதுப்பள்ளி, தைக்காப்பள்ளி, சொறிக்கல்முனை, விழினியடி, பொலிஸ் வீதி ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 04.15 மணி வரையும் மின் தடை அமுலில் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை (15) நிந்தவூர், சாம்மாந்துறை ஆகிய மின்பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட சின்னப்பாலமுனை, கோணாவத்தை, தியட்டர் வீதி, மல்கம்பிட்டி, நெய்னாகாடு ஆகிய பகுதிகளில் காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும், மின் தடைப்படும்.

செவ்வாய்க்கிழமை (16) கல்முனை, நிந்தவூர் ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட 12ஆம் கொலனி, அன்னமலை, நட்பிட்டிமுனை, மணல்சேனை, சேனைக்குடியிருப்பு, ஒலுவில், திராய்கேனி ஆகிய பகுதிகளில் காலை 08.30 முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

புதன்கிழமை (17) நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட நிந்தவூர் பகுதிகளில் காலை 08.30 முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

வியாழக்கிழமை (18) நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட சின்னப்பாலமுனை, கோணாவத்தை வௌவாலோடை, சென்னல் கிராமம், உடங்க 40 வீட்டுத்திட்டம் ஆகிய பகுதிகளில் காலை 08.30 முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

சனிக்கிழமை (20) நிந்தவூர், சம்மாந்துறை ஆகிய மின்பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட அட்டாளைச்சேனை, ஜீ.ரீ.ஸி. தெற்கு, வடக்கு வீதி, முஸ்தபா புரம், ஹிஜ்ராபுரம், சம்புமடு ஆகிய பகுதிகளில் காலை 08.30 முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சீனாவுடனான போட்டித் தன்மைக்காக ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா செயற்படக்கூடாது!



## பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 12

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான போட்டித் தன்மையை இந்தியா ஜெனிவா விவகாரத்தில் இலங்கைக்கு எதிராக வெளிப்படுத்தக் கூடாது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

திஸ்ஸ விதாரண மேலும் கூறியுள்ளவை வருமாறு –

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இம்முறை இடம்பெறவுள்ள கூட்டத்தொடர் தீர்மானமிக்கதாக அமையும்.

ஆகவே, ஜெனிவா விவகாரத்தை அரசாங்கம் நுணுக்கமான முறையில் கையாள வேண்டும். நாடு என்ற ரீதியில் தனித்து செயற்பட முடியாது. சர்வதேச நாடுகளின் ஆதரவு அவசியமாகும்.

இதேவேளை ஜெனிவா விவகாரத்தில், இலங்கைக்கு இந்தியா ஆதரவு வழங்கும் என ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தற்போது அந்த எதிர்பார்ப்பில் சற்று தளம்பல் நிலை காணப்படுகிறது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான முரண்பாட்டை இந்தியா இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்தக் கூடாது.

இந்தியா தற்போது அமெரிக்காவின் கொள்கையை ஈர்த்து செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. ஒரு புறம் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் முரண்பாடு மறுபுறம் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் முரண்பாடு காணப்படுகின்றது.

இந்த மூன்று நாடுகளும் இலங்கையை ஜெனிவா விவகாரத்தில் நெருக்கடிக்குள்ளாக்கக் கூடாது. சீனா இலங்கைக்கு எதிராக தொடர்ந்து ஆதரவு வழங்கும் என்ற உறுதிப்பாட்டை அமெரிக்காவும் இந்தியாவும் விரும்பவில்லை.

பலம் கொண்ட இந்த மூன்று நாடுகளும் இலங்கையின் தேசிய வளங்களைக் கைப்பற்ற ஆரம்ப காலத்தில் இருந்து பல்வேறு வழிமுறைகளில் முயற்சித்துள்ளன. – என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மட்டக்களப்பு மன்ரேசா கிராம வீதிக்கு 9 வீதி மின்விளக்குகள்





மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் திரு.மா.தயாபரன் அவர்களின் துரித முயற்சியினால் மட்டக்களப்பு மன்ரேசா கிராம வீதிக்கு ஒன்பது வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

மன்ரேசா கிராம மக்களின் வேண்டுகோளை ஏற்று கிறேஸ் லைப் லைன் தொண்டு நிறுவனத்தின் ரூபா 45,000 நிதி அனுசரணையோடு மாநகர ஆணையாளரின் வழிநடத்தலில் நேற்று இவ்வீதிக்கு குறித்த விளக்குகள் பொருத்தப்பட்டன.

குறித்த பணியின்போது கிறேஸ் லைப்லைன் தொண்டு நிறுவனத்தின் நிறுவுனர் திரு.எஸ்.ரமணதாஸ் அவர்களும் சமூக ஆர்வலர் திரு.சு.சியாந் அவர்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை இவ்வீதியால் இரவுநேர பயணங்களை மேற்கொள்ளும் பொதுமக்கள் நீண்டகாலமாக வீதி விளக்குகள் இல்லாமல் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச நாணய நிதியத்தை விடுத்து சீனாவிடமிருந்து நிதி பெறுவது ஏன்?

### மங்கள கேள்வி



சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கம் சீனாவிடமிருந்து நிதியைப் பெற முற்படுகின்றது என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு 150 கோடி டொலர் நிதியை (நாணய இடமாற்று அடிப்படை) வழங்குவதற்கு சீனா அனுமதியளித்திருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளதாக பிரபல ஆங்கில நாளிதழொன்றில் நேற்று செய்தி வெளியாகியிருந்தது.

இந்நிலையில், இது குறித்து மங்கள சமரவீர தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று வியாழக்கிழமை கருத்தொன்றைப் பதிவிட்டுள்ளார்.

அதில் – சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான முறையான செயற்றிட்டமொன்றை முன்னெடுப்பதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கம் தற்காலிகமான பொருளாதார மீட்சிக்காக சீனாவிடம் 100 கோடி டொலர் நிதியைப் பெறவுள்ளது.

இது எதனடிப்படையிலான பெறுகை? அத்தோடு இதனை மீளச் செலுத்துவதற்குரிய காலப்பகுதி எவ்வளவு?' என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

## கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய சிவராத்திரி விசேட வழிபாடுகள்



கடந்த வருடம் கொரோனா காரணமாக சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட முடியாத நிலையில் இவ் வருடம் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் இவ் வருடம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் விரதத்தை சுகாதார முறைப்படி அனுஷ்டிக்க அரசாங்கம் அனுமதித்திருந்தது.

அந்த வகையில் இலங்கையின் பஞ்ஈஸ்வரங்களில் ஒன்றான கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரம் ஆலயத்திலும் சிவராத்திரிக்கான விசேட வழிபாடுகள் சுகாதார முறைப்படி நடைபெற்றன.

சிவனுக்கு அபிசேகம் இடம்பெற்று 4 சாம பூசைகள் இடம்பெற்று வழிபாடுகளில் அடியார்கள் சுகாதார முறைப்படி வழிபாட்டில் ஈடுபட்டனர்.

## சுற்றாடல் அழிவைத் தடுக்க அனைவரும் முன்வர வேண்டும் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் வேண்டுகோள்





திருகோணமலை மாவட்டம் அரிய பல வளங்களை கொண்ட மாவட்டமாக காணப்படுகின்றது. இம்மாவட்டத்தில் அண்மைய ஆண்டுகளில் பாரிய அளவான காடுகள் சூட்சகமான முறையில் ஒரு சில குழுக்களால் அழிக்கப்பட்டு அபிவிருத்தி செயற்பாடுகள் சட்டவிரோதமான முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள காட்டு வளத்தை பாதுகாப்பதற்கு பிரதேச மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

அத்துடன் காடழிவை மேற்கொள்ளும் நாசகார செயல்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பான விவரங்களை உரிய திணைக்களங்களுக்கு வழங்குவதன் மூலமாக அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்க முடியும். இதன் மூலம் மாவட்டத்தில் அதிகளவில் இடம்பெறுகின்ற காடழிவை தடுக்க ஏதுவாக அமையும். இவ்வாறானவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு பாரியளவிலான சுற்றிவளைப்புகள் திடீரென்று மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட சுற்றாடல் பாதுகாப்பு குழு கூட்டம் கடந்த புதனன்று மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஆறுகளை பாதுகாப்போம் வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் அது தொடர்பான செயற்பாடுகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் இதன்போது மத்திய சுற்றாடல் அதிகார சபை உத்தியோகத்தரால் தெளிவுபடுத்தப்பட்டது.

ஆற்றங்கரைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சில செயற்பாடுகள் காரணமாக பொருளாதார ரீதியாக பல்வேறு பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டும்.

எனவே தான் அரசாங்கம் ஆறுகளை பாதுகாப்போம் என்ற செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. சூழல் நேயமிக்க அடிப்படையில் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதால் இத்திட்டம் ஏதுவாக அமையும். திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஆற்றங்கரை ஓரங்களில் மேற்கொள்ளப்படும் சில வேண்டத்தகாத செயற்பாடுகள் சுற்றாடலுக்கு பாதகமாக அமைந்துள்ளது. அவற்றை எவ்வாறு பாதுகாக்கலாம் எவ்வாறு தடுக்கலாம் என்பது தொடர்பில் உரிய முன்மொழிவுகளை வழங்குமாறு இதன்போது அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.ஏ.அனஸ், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

A/L 2023
கலை, வர்த்தகம்
கணிதம், உயிரியல்
NEC
வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன.
குறிப்பு:- 2023 இல் புதிதாக இணையவுள்ள மாணவர்கள் தமது பாடத் தெரிவினை மேற்கொள்வதற்கும் மாணவர் முன்னேற்றத்தை சிறப்பாக வழிநடத்தவும் கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல் பாடங்களின் புலமை வாய்ந்த ஆசிரியர்களினால் மார்ச் மாத கட்டணமின்றி விசேட வழிகாட்டல் சேவை வழங்கப்படுகின்றது.
A/L 2021, 2022, Day Class
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.
076 166 1986

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2021 இல் வெளியிடப்பெற்றது.